**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 212 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 7** |
| **Name** | : | திரு. உதயா |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.12.2023**

எதிரி1 ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை, ஆனையூர், அகதிகள் முகாமில் குடியிருந்து வருகிறேன். பெயின்ட்டிங் வேலை செய்கிறேன். ஆஜர் 1 வது எதிரியையும், 2 வது எதிரியையும் தெரியாது. ஆஜர் 1 வது எதிரியின் மனைவியைத் தெரியும். 30.05.2016 ம் தேதியன்று நான் சுவேந்திரன் என்பவரும் கேம்ப் கிரவுண்டில் உட்கார்ந்திருந்தோம். அப்போது அங்கு கூடல்புதூர் ஸ்டேசனில் இருந்து 4 போலிசார் வந்திருந்தார்கள். எங்கள் இருவரையும் கூப்பிட்டார்கள். தெய்வேந்திரன் வீட்டிற்கு கூட்டிச்சென்றார்கள். அந்த வீட்டை போட்டோ எடுத்தார்கள். படம் வரைந்தார்கள். பின்னர் அந்த 4 போலிசும் தெய்வேந்திரன் வீட்டிற்குள் சென்று பார்த்தார்கள். தெய்வேந்திரன் மகள் சாருலதா சூப்பர் வாஸ்மால் குடித்து இறந்துவிட்டார். தெய்வேந்திரன் வீட்டிற்குள் சென்றபோது அங்கு 3 பாட்டில் சூப்பர் வாஸ்மால் இருந்தது. அந்த 3 பாட்டில்களையும் போலிசார் எடுத்தார்கள். அதை எடுத்ததற்காகவும்

எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். **என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜர் அதசாஆ.5 ஆகும். அத்தாட்சி அதசாஆ.6 ஆகும்.** அந்த 3 பாட்டில்கள் ஏற்கனவே அசாபொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>

நான் மதுரை ஆனையூர் அகதிகள் முகாமில் 1990 ம் ஆண்டு முதல் வசித்து வருகிறேன். தெய்வேந்திரன் எனக்கு நன்கு பரிட்சயமானவர் என்றால் சரிதான். எனது வேலை நேரம் காலை 09.00 மணி முதல் சாயங்காலம் 06.00 மணி வரை ஆகும். பொதுவாக எனக்கு ஞாயிற்றுக் கிழமை மட்டும் விடுமுறை இருக்கும் என்றால் சரிதான். சிலசமயம் விடுமுறை இருக்காது. தெய்வேந்திரன், ஆனையூர், பாத்திமாகல்லூரி ஆகிய பகுதிகளில் பழக்கவழக்கம் உள்ளவர் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தெய்வேந்திரன் வீட்டில் ஒரு பிரச்சனை ஏற்பட்டது என்றால் அக்கம் பக்கம் உள்ளவர்கள் வந்து விசாரித்து கூட்டம் இருந்திருக்கும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் சொன்ன தேதியில் வேலைக்குச் சென்றுவிட்டேன் என்றும் தெய்வேந்திரன் எனக்குத் தெரிந்த நபர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் போலிசார் வந்து சம்பவ இடத்தைப் பார்வையிடவில்லை என்றும் சான்றுபொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையெழுத்து போட்டுவிட்டு தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில், தெய்வேந்திரன் மகள் சூப்பர் வாஸ்மால் குடித்த விபரம் பற்றி சொன்னேனா என்றால் சொன்னேன். எந்த தேதியில் நான் மருத்துவமனைக்குச் சென்று சாருலதாவைப் பார்த்தேன் என்றால் நான் மருத்துவமனைக்குச் செல்லவில்லை. போலிசார் சம்பவ இடத்திற்கு சாருலதா மருந்நது குடித்த 24

மணிநேரத்தில் வந்து பார்த்திருப்பார்களா என்றால் போலிசார் வருவதற்கு 10 நாட்களுக்கு முன்பே சாருலதா மருந்து குடித்துவிட்டார். நான் தெய்வேந்திரனுக்குத் தெரிந்த நபர் என்பதாலும் தெய்வேந்திரன் சொல்லிக்கொடுத்து சூப்பர் வாஸ்மால் குடித்ததாக சொல்கிறேன் என்றும் தெய்வேந்திரனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்த ஆவணங்களில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்துப் பார்க்கவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO.212 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 8** |
| **Name** | : | திரு. S.செந்தில்குமார் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.12.2023**

எதிரி1 ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் காவல்துறையில் சிறப்பு சார்பாய்வாளராக பணிபுரிந்து, விருப்ப ஓய்வில் சென்றுவிட்டேன். கடந்த 02.06.2016 ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு கூடல்புதூர் காவல்நிலைய குற்ற எண்.723/2016 பிரிவு 304 (B) இதச வழக்கில் இறந்த சாருலதா என்பவரது பிரேத பரிசோதனைக்குக் கடவுச் சீட்டு பெற்று, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சவக் கிடங்கில் மேற்படி பிரேதத்தினை பிரேத விசாரணை அதிகாரி கனம் மதுரை வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு பிரேதத்தை அங்க மச்ச அடையாளம் காண்பித்தேன். வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பிரேத விசாரணை முடித்த பின்பு, விசாரணை அறிக்கை கடிதத்தினை அரசு மருத்துவக் கல்லூரி தடய அறிவியல் துறையில் கொடுத்து மேற்படி பிரேத பரிசோதனைக்காக அலுவல் மருத்துவ அதிகாரியிடம் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். பிரேத பரிசோதனைக்குப் பிறகு, இறந்த சாருலதா என்பவர் பிரேதத்தை

அவரது அப்பா தெய்வேந்திரன் என்பவரிடம் ஒப்படைத்து கையொப்பம் பெற்றேன். மேற்படி பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட உடல் உள்உறுப்புக்களை 03.06.2016 ம் தேதியன்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வாகத்தில் ஒப்படைத்தேன். நிலையம் வந்து அறிக்கை செய்தேன். காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

வருவாய் கோட்டாட்சியர் விசாரணை செய்தபோது, நான் அவருடன் அருகில் இருந்து பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் விசாரணையின் போது, மருந்து குடித்து இறந்த நபர் வரதட்சணை கொடுமையால் இறக்கவில்லை என்று சாட்சிகள் சொன்னார்களா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் வருவாய் கோட்டாட்சியருக்கு பிரேத்தை மட்டும் அடையாளம் காண்பித்தேன். தனிப்பட்ட முறையில் யாரும் என்னிடம் இறந்த நபர் வரதட்சணை கொடுமை செய்யப்பட்டதாக சொல்லவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை